Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**




தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 042 | செவ்வாய்க்கிழமை Tuesday | 12.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## சட்டப்பேரவை கூட்டம் தொடங்கியது:

# முதலமைச்சர் விஜய் உட்பட புதிய எம்.எல்.ஏ.க்கள் பதவியேற்பு



சென்னை: 17-வது சட்டப்பேரவையின் முதல் கூட்டம் தொடங்கியது.

இதில், தற்காலிக பேரவைத் தலைவர் கருப்பையா முன்னிலையில், முதல்வர் ஜோசப் விஜய் உட்பட பேரவையின் புதிய உறுப்பினர்கள் எம் எல் ஏ வாக பதவியேற்க தொடங்கினர். தமிழக முதல்வராகதவெகதலைவர்ஜோசப் விஜய் பதவியேற்றார். இதனையடுத்து தற்காலிக பேரவைத் தலைவராக சோழவந்தான் தொகுதி தவெக உறுப்பினர் எம்.வி.கருப்பையாவை நியமிப்பதற்கான கோப்பில், முதல்வர் ஜோசப் விஜய்யிடம், பேரவைச் செயலர் கி.சீனிவாசன் ஒப்புதல் பெற்றார்.

ஆளுநர் மாளிகையில், தற்காலிக பேரவைத் தலைவராக கருப்பையாவுக்கு ஆளுநர் அர்லேகர் நேற்று மாலை 4 மணிக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இந்நிகழ்வில், முதல்வர் ஜோசப் விஜய் மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகள் பங்கேற்றனர். இந்த நிலையில்,17-வது சட்டப்பேரவையின் முதல் கூட்டம் இன்று காலை தொடங்கியது. இதில் பங்கேற்பதாக தவெக, திமுக, அதிமுக உள்ளிட்ட கட்சிகளின் சார்பாகவெற்றிபெற்றஉறுப்பினர்கள் அனைவரும் சட்டப்பேரவைக்கு வருகை தந்தனர். எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக எம்எல்ஏக்கள் ஒரு குழுவாகவும், எஸ்.பி.வேலுமணி தலைமையில் ஒரு குழுவாகவும் தனித்தனியாக வந்தனர். இருவரும் ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொள்ளவில்லை.

சரியாக 9.30 மணிக்கு சட்டப்பேரவையின் முதல் கூட்டம் சபாநாயகர் தலைமையில் தொடங்கியது. சபாநாயகர் உரைக்குப் பிறகு முதல்வர் விஜய் உட்பட உறுப்பினர்கள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக வந்து உறுதிமொழி எடுத்துக்கொள்ள தொடங்கினர். பின்னர், அமைச்சர்கள் வரிசையில் தவெகவை சேர்ந்த கீர்த்தனா கடைசியாக அழைக்கப்பட்டார்.சட்டமன்றசெயலாளர் சீனிவாசன் அவரது பெயரை கூறி அழைத்தார். பெயரை அழைத்ததும், கீர்த்தனாவும் எம்எல்ஏவாக பதவியேற்பதற்காக சென்றார். அப்போது, சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற சான்றிதழை சட்டமன்ற செயலாளர் சீனிவாசன் கேட்டார்.

அதற்கு கீர்த்தனா,தான் சான்றிதழ் கொண்டுவரவில்லை என்றார்.

அவர் பதவியேற்க சட்டமன்றச் செயலாளர் அனுமதி மறுத்தார்.

இதனால் அவர் மீண்டும் தனது இருக்கைக்கு சென்றார். ஆனால், வீட்டில் இருந்து வெற்றி சான்றிதழை கொண்டு வந்த அமைச்சர் கீர்த்தனா, மதியம் 1.30 மணியளவில் எம்எல்ஏவாக பதவி ஏற்றுக் கொண்டார்.

# முன்னாள் முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்து முதலமைச்சர் விஜய் வாழ்த்து பெற்றார்



சென்னை: தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள ஜோசப்விஜய்,முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலினைஅவரது இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த தவெகவின் தலைவர் ஜோசப் விஜய், தமிழக முதல்வராக நேற்று பொறுப்பேற்றார். இந்த சூழலில், அவர் இன்று தமிழக முன்னாள் முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலினை அவரின் இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார். முன்னாள் முதல்வர் ஸ்டாலினை சந்திக்க ஆழ்வார்பேட்டை இல்லத்துக்கு வந்த ஜோசப் விஜய்யை, சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாசலுக்கே வந்து ஆரத் தழுவி வரவேற்றார். முன்னாள் முதல்வர் ஸ்டாலினுக்கு ஜோசப் விஜய் பொன்னாடை போர்த்தி வாழ்த்து பெற்றார். பதிலுக்கு ஸ்டாலினும் ஜோசப் விஜய்க்கு பொன்னாடை போர்த்தினார். உதயநிதி ஸ்டாலின் ஜோசப் விஜய்க்கு புத்தகம் வழங்கினார்.

இதனையடுத்து முதல்வர் ஜோசப் விஜய், முன்னாள் முதல்வர் ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் சிறிது நேரம் உரையாடினார்கள். இந்த சந்திப்பின் போது முன்னாள் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, ஐ.பெரியசாமி, சக்கரபாணி, சேகர்பாபு உள்ளிட்டோரும் உடனிருந்தனர்.

# தமிழக அரசியல் வரலாற்றில் இதுவரை கண்டிராத ஒரு புதிய திருப்பமாக சட்டப்பேரவையில் ஒரே வரிசையில் திமுக மற்றும் அதிமுக



சென்னை:

தமிழக அரசியல் வரலாற்றில் இதுவரை கண்டிராத ஒரு புதிய திருப்பமாக, சட்டப்பேரவையின் எதிர்க்கட்சி வரிசையில் திமுக மற்றும் அதிமுக உறுப்பினர்கள் அருகருகே அமர்ந்திருந்தது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

தமிழகத்தில் 1967-ல் திமுக-வும், 1977-ல் அதிமுக-வும் முதன்முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றன.

அன்று முதல் சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக இரு கட்சிகளும் மாறி மாறி ஆளுங்கட்சியாகவும், பிரதான எதிர்க்கட்சியாகவும் மட்டுமே இருந்து வந்துள்ளன.

ஆனால், 2026 சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு,புதிய அரசியல் சூழலில் இன்று இந்த இரு கட்சிகளும் எதிர்க்கட்சியாக, ஒரே வரிசையில் அமரும் நிலை ஏற்பட்டுள்ளது. அதிமுக் தொடர்ந்து இரண்டாவது முறையாக எதிர்க்கட்சி வரிசையில் அமர்வதும் இதுவே முதல்முறை ஆகும்.

மேலும், ஆளுங்கட்சி இருக்கைகளில் புதிய முகங்களும், நீண்டகாலம் ஆட்சி செய்த பாரம்பரியக் கட்சிகள் இரண்டும் எதிர்க்கட்சி வரிசையிலும் அமர்ந்திருப்பது தமிழக தேர்தல் வரலாற்றின் மிகப்பெரிய மாற்றமாக கருதப்படுகிறது.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் 6 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு



சென்னை: மன்னார் வளைகுடா பகுதியில் நிலவும் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக தமிழகத்தில் ஒருசில இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலைஆய்வுமையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்: "மன்னார் வளைகுடா பகுதியில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சியால், குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இது ஆழ்ந்த காற்றழுத்ததாழ்வுப்பகுதியாக வலுவடையும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக இன்று (மே.11) முதல் மே.16ம் தேதி வரை 6 நாட்களுக்கு தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். குறிப்பாக (மே.11) ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும். மே.12ம் தேதி (நாளை) தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்களில் பலத்த காற்றுடன் கன மழை பெய்யக்கூடும்.

மே.13ம் தேதி முதல் 16ம் தேதி வரை நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைபொருத்தவரை இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையில் அதிகபட்சமாக 34 டிகிரி செல்சியஸ் முதல் 27 டிகிரி செல்சியஸ் பதிவாக வாய்ப்புள்ளது. மீனவர்கள் எச்சரிக்கை: தென்மேற்கு வங்கக்கடலின் சில பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென் கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

அதனால் இன்று முதல் 14ம் தேதி வரை குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில்**

**இணையுங்கள்**

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார். ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (11.05.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், மின்னணு குடும்ப அட்டை, மின் இணைப்பு, தெரு விளக்கு, ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 150 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார். தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், மாற்றுத்திறனாளி நல அலுவலர் பூபதி உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்ட தவெக வேட்பாளர் செங்கோட்டையன் வெற்றி பெற்றார். இந்நிலையில் தவெக தலைமையிலான அரசு முதல் முறையாக பொறுப்பெற்ற நிலையில் 17 ஆவது சட்டப்பேரவை நேற்று கூடியது. இதில் கோபி எம்.எல்.ஏவாக செங்கோட்டையன் பதவியேற்றுக் கொண்டார். நேற்று முன்தினம் முதல்வராக விஜய் பதவி ஏற்ற போது செங்கோட்டையன் அமைச்சராக பதிவியேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (11.05.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார்.



திருப்பரங்குன்றம் வில்வநாதர் சுவாமி டிரஸ்ட் மற்றும் அகத்தியர் சன்மார்க்க சங்கம் மதுரை கிளை மற்றும் வள்ளலார் வைத்தியசாலை,சேவாபாரதி தென் தமிழ்நாடு இணைந்து நடத்திய இலவச கண் கலிக்கம்மருத்துவ முகாம் ஞான பண்டிதன் மடாலயத்தில் சேவாபாரதி மாநகர தலைவர் கதிரேசன் தலைமையில்நடைபெற்றது இம்மருத்துவ முகாமை சிறப்பு விருந்தினர்தொழில் அதிபர் நடராஜன் இம்முகாமினேகுத்து விளக்கு ஏற்றி தொடங்கிவைத்தார் இம்முகாமில் திருப்பரங்குன்றம் பகுதிபொதுமக்கள் ஏராளமான பேர் கலந்து கொண்டுமருத்துவ முகாமில் சிறப்பு என்னவென்றால் கண் கலக்கிமருத்துவத்தை கண் குணமடைவதையும் மற்றும் பொதுமக்கள் நலனையும் பேணி காப்பதில் சேவா பாரதியின் நோக்கமாக செயல்படுகிறது இந்நிகழ்ச்சியில் சொக்கலிங்கம் மற்றும் பொருளாளர் கண்ணன், சேவாபாரதி செயலாளர் அலுவலக பொறுப்பாளர் ராஜேஸ்வரன், பாரதி, ஜோதி ,ராம்பிரகாஷ், கணேஷ் மற்றும் நிர்வாகிகளும் ஏராளமான பொதுமக்களும் கண்கலிக்கம் மருந்து ஊந்தி சென்றனர்

## தமிழ்நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சார்பில் படித்த வேலைவாய்ப்பற்றோர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம்



தமிழ்நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சார்பில் படித்த வேலைவாய்ப்பற்றோர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி மாதம் ஒன்றுக்கு SSLC தேர்ச்சி பெறாதவர்களுக்கு ரூ.200/-ம். SSLC தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.300/-ம், மேல்நிலைக்கல்வி(12ம்வகுப்பு)தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.400/-ம் பட்டதாரிகளுக்கு ரூ.600/-ம் வழங்கப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகளுக்குSSLC மற்றும் அதற்கு கீழ் படித்தவர்களுக்கு ரூ.600/-ம் மேல்நிலைக்கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.750/-ம் பட்டதாரிகளுக்கு ரூ.1000/-ம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கீழ்கண்ட தகுதியுடைய படித்த வேலைவாய்ப்பற்றோர் இவ்வுதவித்தொகையினை பெறுவதற்கான விண்ணப்பத்தினை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நேரில் அணுகியும் அல்லது பின்வரும் இணையதளம் வாயிலாகவும்பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

SSLC தேர்ச்சி, SSLC தேர்ச்சி பெறாதவர்கள் (முறையாக பள்ளியில் படித்து SSLC தோல்வி அடைந்திருக்க வேண்டும்) அல்லது அதற்கு மேற்பட்ட கல்வித் தகுதியுடன் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்கு மேல் பதிவினை தொடர்ந்து புதுப்பித்திருக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள் பதிவு செய்து ஒரு வருடம் முடிவடைந்திருக்க வேண்டும்.

SC/ST பிரிவினருக்கு 31.03.2026 அன்று 45 வயதும், இதர பிரிவினருக்கு 40 வயதும் கடந்திருக்கக் கூடாது. விண்ணப்பதாரரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/- க்கு மிகாமல் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் பள்ளி/கல்லூரியில் நேரடியாக படித்துக் கொண்டிருக்க கூடாது. (அஞ்சல் வழியில் படிக்கலாம்).

விண்ணப்பதாரர் முற்றிலும் வேலையில்லாதவராக இருத்தல் வேண்டும். சுய வேலைவாய்ப்பி லும் ஈடுபட்டிருக்க கூடாது.

விண்ணப்பதாரர் தனது பள்ளி/கல்லூரிக் கல்வியை முழுமையாக தமிழ்நாட்டில் முடித்திருக்க வேண்டும் அல்லது பெற்றோர்/பாதுகாவலர் குறைந்தது 15 ஆண்டுகள் தமிழ்நாட்டில் குடியிருந்திருக்க வேண்டும். விண்ணப்பதாரர் கலைஞர் உரிமைத்தொகை மற்றும் வேறு எந்தவொரு நிதியுதவி யையும் பெறுபவராக இருத்தல் கூடாது. பொறியியல், மருத்துவம். விவசாயம், கால்நடை அறிவியல் போன்ற தொழில்நுட்ப பட்டம் பெற்றவர்கள் இவ்வுதவித்தொகைபெறத்தகுதியற்றவர்கள்

விண்ணப்ப படிவங்களை https://tnvelaivaaippu.gov.in என்ற இணையதளம் வாயிலாகவும், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை நேரில் அணுகியும் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வுதவித்தொகைபெற முதல் முறையாக விண்ணப்பிக்க விரும்பும் தகுதியுடையவர்கள் விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்து விண்ணப்பத்தினை தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் துவக்கப்பட்ட கணக்குப் புத்தகம், ஆதார்கார்டு, குடும்பஅட்டை மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நேரில் சமர்ப்பிக்கலாம்.

ஏற்கனவே இவ்வலுவலகம் வாயிலாக உதவித்தொகை பெற்று வரும் பொது மற்றும் மாற்றுத்திறனாளி பயனாளிகள் சுய உறுதி ஆவணத்தினை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.



ஈரோடு மாவட்டம் பெருந்துறை சட்டமன்றத் தொகுதியில், அதிமுக சட்ட மன்ற உறுப்பினர் பதவிக்கு போட்டியிட்டு வெற்றி பெற்ற ஜெயக்குமார் நேற்று (மே.11) பதவி ஏற்றுக்கொண்டார். முதன் முறையாக அமைந்துள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் தலைமையிலான அரசின் 17வது சட்டப்பேரவையில், அதிமுக சட்டமன்ற உறுப்பினராக பதவியேற்றுக் கொண்டு, உறுதிமொழி எடுத்துக் கொண்டார்.



ஈரோடு மாவட்டத்தின் கபடிக் என்று புதிய வலைதள துவக்க விழா மற்றும் ஈரோடு மாவட்ட கபடி அமைச்சூர் கழகத்தின் ஐம்பெரும் விழா நேற்று முன்தினம் கோபியில் நடைபெற்றது. ஈரோடு மாவட்ட அமைச்சூர் கபடி கழகத்தின் தலைவர் சி.தங்கவேல் தலைமையில் நடைபெற்ற விழாவில் கபடி போட்டியில் சிறந்து விளங்குபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

## இந்திய அளவில் பரிசு பொருட்கள் விற்பனையில் பிரீமியம் பிராண்டான மூமெண்ட்ஸ் ஸ்டோர், தனது புதிய கிளையை கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் துவங்கியுள்ளது



இந்திய அளவில் திருமண நிகழ்ச்சிகள் மற்றும் பிரீமியம் பரிசுப் பொருட்கள் விற்பனையில் முன்னணி இடம் வகிக்கும் மூமெண்ட்ஸ் நிறுவனத்தின் புதிய கிளை கோவை ஆர்.எஸ். புரம் பகுதியில் துவங்கப்பட்டது.

தமிழகத்தில் முதல் கிளையாக கோவையில் துவங்கப்பட்டுள்ள இதற்கான துவக்க விழா கிளை உரிமையாளர் பிரியதர்ஷினி தலைமையில் நடைபெற்றது..

திருமண அழைப்பிதழ்கள், வெள்ளி பரிசுப் பொருட்கள், கார்ப்பரேட் கிப்ட்ஸ், லக்சுரி ஹோம் டெக்கார் மற்றும் தனிப்பட்ட நினைவுப் பரிசுகள் போன்றபல்வேறு பிரீமியம் சேவைகளின் மூலம் இந்திய அளவில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ள இந்த நிறுவனம், தற்போது தனது சேவையை கோவையிலும் விரிவுபடுத்தியுள்ளதாக விழாவில் கலந்து கொண்ட மூமெண்ட்ஸ் நிறுவனத்தின் சி.இ.ஓ.சர்வேஷ் கல்ரா தெரிவித்தார்..

நிகழ்ச்சியில் பேசிய நிர்வாகிகள், ஒவ்வொரு கொண்டாட்டமும் ஒரு உணர்வில் தொடங்குகிறது" என்ற கருத்தை மையமாகக் கொண்டு செயல்படும் மூமெண்ட்ஸ் நிறுவனத்தில் "ஒவ்வொருபொருளும் மிகுந்த நுணுக்கத்துடன் வடிவமைக்கப்படுகிறது. ஒவ்வொரு பரிசும் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் உருவாக்கப்படுகிறது. வாடிக்கையாளர்களின் சிறப்பு தருணங்களை மறக்க முடியாத நினைவுகளாக மாற்றுவதே எங்கள் நோக்கம்" எனதெரிவித்தனர்.

திருமண விழாக்களை கனவுகளுடன் இணைக்கும் வகையிலான பிரம்மாண்ட திருமண அழைப்பிதழ்கள், பாரம்பரியத்தையும் அழகிய வடிவமைப்பையும் இணைக்கும் வெள்ளி கலைப்பொருட்கள், நிறுவனங்களுக்கான உயர்தர பரிசுகள் மற்றும் வீடுகளின் அழகை உயர்த்தும் பிரீமியம் அலங்கார பொருட்கள் ஆகியவை இங்கு இடம்பெற்றுள்ளன.

வாழ்நாள் முழுவதும் நினைவில் நிற்கும் அனுபவங்களை பரிசுகளின் வாயிலாக உருவாக்குவதே தங்களது நோக்கம் என தெரிவித்தனர்..

### கோவை சரவணம்பட்டி பகுதியில்

## அழகியல் தொடர்பான துறையில் உயர்தர சேவையை வழங்கி வரும் பேஜ் 3 நிறுவனம் கோவையில் தனது மூன்றாவது கிளையை சரவணம்பட்டி பகுதியில் துவங்கி உள்ளது




கோவை சரவணம்பட்டி பகுதியில், பேஜ்-3 எனும் சலூன்,திறக்க பட்டது. இதனை பேஜ் - 3 அழகு நிலையத்தின் உரிமையாளர் அமராவதி ஒருங்கிணைப்பில் நடைபெற்றது.

இதில், பேஜ் - 3 நிறுவனத்தின், தலைமை செயல்அதிகாரிசண்முக குமார் முன்னிலை வகித்தார். இதில் சிறப்பு விருந்தினர்களாக

நேச்சுரல்ஸ் நிறுவனத்தின் இணை நிறுவனர் குமரவேல் மற்றும் நிறுவனர் வீணா ஆகியோர் கலந்து கொண்டு புதிய கிளையை திறந்து வைத்தனர். மேலும் தமிழ்நாடு வனத்துறை அகாடமியின் கூடுதல் இயக்குநரும், வன பாதுகாப்பாளருமான வித்யா சந்திரன் கவுரவ விருந்தினராக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். புதிதாக துவங்கப்பட்டுள்ள பேஜ் 3 அழகியல் ஸ்டுடியோ குறித்து விருந்தினர்கள் கூறுகையில்,சரவணம்பட்டி மற்றும் சுற்றுவட்டார மக்களுக்கு உலகத் தரத்தில் அழகு மற்றும் மேக்கோவர் சேவைகளை வழங்கும் நோக்கில் இந்த புதிய கிளை துவங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்..

பெண்கள் மற்றும் ஆண்களுக்கான நவீன ஹேர் ஸ்டைலிங், ஸ்கின் கேர், பிரைடல் மேக்கப் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் இங்கு வழங்கப்பட உள்ளதாகவும், குறிப்பாக விரைவான சேவை மற்றும் வாடிக்கையாளர்களின் அழகியல்தொடர்பானதேவைகள் அனைத்தும் ஒரே இடத்தில் வழங்கும் வகையில் இந்த மேக் ஓவர் ஸ்டுடியோ உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்..

நிகழ்ச்சியில்தொழில்துறைபிரமுகர்கள்,சமூக ஆர்வலர்கள், மற்றும் பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோவை சரவணா நகர் பகுதியில் உள்ள பெத்லஹேம் ஜாய் ஜெபவீட்டின் சார்பாக, கோவை சாய்பாபா காலனியில் ஞாயிறு ஆராதனை சிறப்பு வழிபாடு நடைபெற்றது



கோவை கவுண்டம்பாளையம் அடுத்த சரவணா நகர் பகுதியில், பெத்லஹேம்ஜாய்எனும் ஜெபவீடு அமைந்துள்ளது. இந்த ஜெபவீட்டின் சார்பாக, கோவை சாய்பாபா காலனியில், உள்ள தனியார் அரங்கில் ஞாயிறு ஆராதனை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பெத்லஹேம் ஜாய் ஜெபவீட்டின் போதகர் ஜான் பீட்டர் கலந்து கொண்டு பைபில் வசனங்களை வாசித்தும், பாடல்கள் பாடியும், சிறப்பு ஆராதனை வழிபாட்டினை நடத்தினார்.

பைபில் வசனங்களில் இயேசு பிதா என்னென்ன கூறுகின்றார் எந்த சூல்நிலையில் எங்வாறு நடந்து கொண்டார் என, பைபில் பதிவு செய்ய பட்ட விளக்கங்களை எடுத்து கூறினார். தொடர்ந்து ஞாயிறு ஆராதனையை தொடர்ந்து, பெத்லஹேம்ஜாய்ஜெபவீட்டின் சார்பாக, பெண்கள், குழந்தைகள் எனபலரும் நடன நிகழ்ச்சியை மேற்கொண்டனர். பைபில் வசனங்களை பாடல்களாக பாடி நடனமாடியது உற்ச்சாகமடைந்தனர். இந்த தேவாலயத்தின் சார்பாக கடந்த நாண்கு நாட்களாக நடைபெற்ற விடுமுறை கால வேதாகம பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்ட குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கபட்டது.

இந்த நிகழ்ச்சியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணை தலைவரும், வழக்கறிஞருமான புஸ்பாணந்தம், உதவி போதகர் ஜெயக்குமார், சந்திரன், அரசு போக்குவரத்து கழக பணியாளர் ராஜேஷ், பாஸ்டர் அம்மா ஜாய், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் ஈரோடு வ உ சி பூங்காவில் உள்ள நீச்சல் குளத்தில் மாணவ மாணவிகளுக்கான நான்காம் கட்ட நீச்சல் பயிற்சி முகாம் நடைபெற உள்ளது. அதன்படி வருகின்ற 17ஆம் தேதி முதல் தொடங்க உள்ளது. இதில் ஏழு வயதிற்கு மேற்பட்ட சிறுவர், சிறுமிகள் மற்றும் ஆண், பெண்கள் கலந்து கொள்ளலாம் என ஈரோடு மாவட்ட துறை சார்ந்த அதிகாரி ராஜகோபால் தெரிவித்துள்ளார்.

# தாய்மண் அறக்கட்டளை இளைஞர்களின் விளையாட்டு விழா உற்சாகம்



கடலூர் மாவட்டம் ஸ்ரீமுஷ்ணம் அருகே உள்ள பாளையங்கோட்டை கிராமத்தில் தாய்மண் அறக்கட்டளை மற்றும் இளைஞர்கள் குழுவின் தொடர் முயற்சியால் முதலாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பல்வேறு விளையாட்டு மற்றும் பாரம்பரிய போட்டிகள் கோலாகலமாக நடைபெற்றன.

மெய்ய.சுந்தரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இராபர்ட் வின்செண்ட் முன்னிலை வகித்தார். தொடர்ந்து சிராஜ் வரவேற்புரை ஆற்றினார். சிறப்புவிருந்தினர்களாக O.N.S செல்வராஜ் மற்றும் பிரிட்டோ கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

போதை தடுப்பு விழிப்புணர்வை மையமாக கொண்டு நடைபெற்ற இந்த விழாவில் மாரத்தான், ஓட்டப்பந்தயம், குண்டு எறிதல், கயிறு இழுத்தல், கபடி, கோகோ, கோலப்போட்டி, சிலம்பம், இசை நாற்காலி உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. இதில் இளைஞர்கள் மட்டுமின்றி பெண்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

மேலும் இளைஞர்களுக்கான மோட்டார் பைக் போட்டியும் நடைபெற்றது. போட்டிகளை காண சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு வீரர்களை உற்சாகப்படுத்தினர்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சிறப்பு விருந்தினர்கள் மற்றும் கிராம மக்கள் முன்னிலையில் பரிசுகள் மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட்டு பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டன.

இளைஞர்களை போதை பழக்கத்திலிருந்து விலக்கி, விளையாட்டின் மூலம் சமூக நல்லிணக்கத்தை உருவாக்கும் நோக்கில் தொடர்ந்து செயல்பட்டு வரும் தாய்மண் அறக்கட்டளைமற்றும் இளைஞர்கள் குழுவிற்கு பொதுமக்கள் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர். நிகழ்ச்சியில் ஒருங்கிணைப்பாளர் பிரேம் உள்ளிட்ட தாய்மண் குழு நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் அந்தோணி ராஜ் நன்றி உரையாற்றினார்.

# தென்காசி மாவட்டம் தென்காசி ஒன்றியம் மேலகரம் பேரூர் கழகச் செயலாளர் ஈ.சுடலை மறைவு இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை நேரில் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்



தென்காசி மாவட்டம் தென்காசி ஒன்றியம் மேலகரம் பேரூர் கழகச் செயலாளர் ஈ . சுடலை அவர்கள் மறைவு

கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை அவர்கள் நேரில் சென்று மலர் வளையம் வைத்துஅஞ்சலிசெலுத்தினார்

பேரூர் கழக செயலாளருக்கு மூன்று ஆண் குழந்தைகள் மூத்தவர் வீரபாண்டியன் அடுத்தவர் சங்கர் அடுத்து முருகேசன் என்று மூன்று குழந்தைகள் உள்ளது

மூத்த மகன் வீரபாண்டியன் வெளிநாட்டில் பணி செய்து வருகிறார் அவர்களின் மனைவி வேணி மேலகரம் பேரூராட்சி மன்ற தலைவராக பணிபுரிந்து வருகிறார்

கழக என அழைப்பு செயலாளர் பேரூர் கழகச் செயலாளர் குடும்பத்தாருக்கு ஆறுதல் சொன்னார்கள்

இரங்கல் நிகழ்வில் முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் சிவ பத்மநாதன் முன்னாள் கடையநல்லூர் ஒன்றிய கழகச் செயலாளர் காசி தர்மம்துரை கடையம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஜெயக்குமார் மாவட்ட கவுன்சிலர் சாக்ரடீஸ் வழக்கறிஞர் வேலுச்சாமி தொழிலதிபர் வினோத் மாவட்ட பிரதி ஸ்டீபன் சத்யராஜ் கல்லூரணி ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார் மேலகரம் பேரூராட்சி துணைத் தலைவர் ஜீவானந்தம் அவை தலைவர் சலீம் மேலகரம் பொருளாளர் ரமேஷ், மேலகரம் கவுன்சிலர்கள் கபில், நாகராஜ், சிங்கத்துரை . சுந்தர், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கதிர், பாலசுப்பிரமணியம், கணேசன் ,கல்யாணி சந்திரன், பட்டன், வீரபாண்டியன், மாரியப்பன், குற்றாலம் வார்டு செயலாளர் கணேசன் ,ஜெய்சங்கர் வினோத் , குற்றாலம் குத்த்தாலிங்கம் ,குமார் குடியிருப்பு கணேசன் கீழபாவூர் மேற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஹரி கிருஷ்ணன், வார்டு கழக செயலாளர் குத்தாலிங்கம் மற்றும் கழகநிர்வாகிகள் கலந்து கொண்டனர் அமைப்பு செயலாளர் பேரூர் செயலாளர் குடும்பத்தாருக்கு ஆறுதல் சொன்னார்

கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்

# தூத்துக்குடி மக்களின் பிரச்னைகள் ஒவ்வொன்றாக தீர்க்கப்படும் ஸ்ரீநாத் எம்.எல்.ஏ உறுதி



தூத்துக்குடி மக்களின் பிரச்சினைகளை ஒவ்வொன்றாக கையில் எடுத்து அதை தீர்ப்பதற்கான வழியை கண்டு தீப்பதற்கான முயற்சிகள் செய்து சட்டப்படி முடிப்போம் என்று சட்டமன்ற உறுப்பினர் ஸ்ரீநாத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "நேற்றைய நிகழ்வாக தமிழகத்தின் முதலமைச்சராகஜோசப் விஜய் பதவி ஏற்றுக்கொண்டார் அவருக்கு தூத்துக்குடி மக்கள் சார்பாகவும் எனது சார்பாகவும் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இன்று தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினராக ஸ்ரீநாத் ஆகிய நான் பதவி ஏற்று கொண்டேன் அதற்காக தூத்துக்குடி வாழ் மக்கள் அனைவருக்கும்என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

என் வாழ்நாள் கிடைத்த மிக அரிய வாய்ப்பினை சரியாக பயன்படுத்திதூத்துக்குடி மக்களின் வாழ்வுக்காக மேம்பாட்டுக்காக நிச்சயம் பாடுபடுவேன் என்பதை இந்த நேரத்திலே மீண்டும் கூறிக் கொள்கிறேன். சட்டமன்றத்தில் பெரும்பான்மை நிரூபித்தல் மற்றும் சில பணிகள் இருப்பதால் இன்னும்ஒருசிலதினங்களில் தூத்துக்குடியில் வந்து நிரந்தரமாகதங்குவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கிறது.

முதலில் நன்றி அறிவிப்பு கூட்டம் முடிந்த பின்பு தூத்துக்குடி மக்களின் பிரச்சினைகளை ஒவ்வொன்றாக கையில் எடுத்து அதை தீர்ப்பதற்கான வழியை கண்டு தீப்பதற்கான முயற்சிகள் செய்து சட்டப்படி முடிப்போம். மக்கள் எப்பொழுதும் என்னை தொடர்பு கொள்ளும்படி வகையில் அதற்கான வசதிகளை செய்து கொடுப்பேன் என்று கூறுகிறேன்.

மக்கள் அனைவருக்கும் தெரியும் இந்த இடைப்பட்ட காலம் எவ்வளவு இடைஞ்சலான காலமாக இருக்கும் என்று அதை புரிந்து கொண்ட மக்கள் அனைவருக்கும் நன்றி. தூத்துக்குடியில் உள்ளவர்கள் தங்கள் பிரச்சனைகளை தங்கள் தேவைகளை கூறுவதற்கு ஒரு மையப் புள்ளியாக தொலைபேசி எண்கள் மற்றும் அந்த வேலையை செய்வதற்கு என்னுடைய நேரடி பார்வையில்நபர்கள்அமர்த்தப்பட்டு எல்லா வார்டுகளிலும் தங்களுக்கு தேவையான அனைத்து தேவைகளும் நிறைவேற்றப்படும்

கூடிய விரைவில் அதற்குரிய கைபேசி எண் மற்றும் தொடர்பு கொள்ள ஈமெயில் அனைத்தும்பொது வழியில் பொதுமக்களுக்கு வழங்கப்படும். இனி தூத்துக்குடியில் ஒரு புதிய மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையில் உங்கள் சட்டமன்ற உறுப்பினர் ஸ்ரீநாத் இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத்தலைவர்

# அகரக்கட்டு லூர்து நாடார் தலைமையில் தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவரிடம் கோரிக்கை மனு கொடுத்தார்கள்



தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தலைமையில் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனு கொடுத்தார்கள்

அந்த மனுவில் பெருந்தலைவர் காமராஜரால் உருவாக்கப்பட்ட பழைய குற்றாலத்தில் பொதுமக்கள் குளிப்ப தற்கு நிர்ண யக்கப் பட்டுள்ள கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கோரிக்கைவைத்தார்கள் குற்றாலத்திற்கு வருகின்ற சுற்றுலா பயணிகளின் மூலம் கிடைக்ககூடிய வருமானத்தைக் கொண்டு இலட்சக்கணக்கான குடும்பங்கள் தென்காசி மாவட்டத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் ஆண்டுதோறும் குற்றால சீசனின் போதும் ஐயப்ப சுவாமி பக்தர்கள் மாலை அணிந்து வருகின்ற போதும் லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் குற்றாலத்திற்க்கு வந்து செல்லுகின்றார்கள் சுற்றுலா பயணிகளின் நலனுக்காகபெருந்தலைவர் காமராஜரின் ஆட்சி காலத்தில் பழைய குற்றாலத்தில் வீணாக சென்ற தண்ணீரை செயற்கையாக பாறைகளை வடிவமைத்து 1960 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 தேதி பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பழைய குற்றாலத்தை பொது மக்களின் பயன்பாட்டுக்காக திறந்து வைத்தார்கள் ஆனால் எங்களுடைய கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டு பழைய குற்றாலம் பகுதியை வனத்துறை வசம் திமுக தலைவர் முன்னாள் முதல்வர் முக ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு ஒப்படைத்தது

தற்போது பழைய குற்றாலம் பகுதிக்குள் வாகனங்கள் நுழைவதற்கு நுழைவு கட்டணம் கட்ட வேண்டிஉள்ளதுமேலும்

குறிப்பிட்ட பகுதி வரை தான்வாகனங்கள்செல்ல முடியும் அதன் பிறகு வனத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாகனத்தில்பழையகுற்றாலம் செல்ல பத்து ரூபாய் கட்டணம் வசூலிக்க படும் என்றும் அருவியில் பொது மக்கள் குளிக்க இருபது ரூபாய் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது மேலும் கழிப்பறை உடைமாற்றும் அறை போன்றவைகளுக்கு கட்டணம் வசூல் செய்ய வாய்ப்பு உள்ளது

மேலும் அருவியில் குளிப்பதற்கு மக்களை தாங்கும் திறன் எவ்வளவு இருக்கிறதோ அதுவரை தான் பொதுமக்கள் அனுமதிக்கப் படுவார்கள் என்று வனத்துறை கட்டுப்பாடு விதித்துள்ளது

பெருந்தலைவர் காமராஜரால் உருவாக்கப்பட்டு சுமார் 65 ஆண்டு காலம் கட்டணம் எதுவும் இல்லாமல்

சுற்றுலா பயணிகள் பழைய குற்றாலத்தில் குளித்து மகிழ்ச்சி அடைந்தார்கள் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக பழைய குற்றாலம் அருவியில் குளிப்பதற்கு நிர்ணயிக்கப் பட்டுள்ள கட்டணத்தை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின்சார்பில்கேட்டுக்கொள்கிறோம்என்று குறிப்பிட்டு இருந்தார்கள் இதில் பொருளாளர் சுப்ரமணியன் தென்காசி மாவட்ட தலைவர் குருசாமி நாடார் மாநில கல்வி குழு உறுப்பினர் பாலசுப்பிரமணியன் கிருஷ்ணமூர்த்தி சமீத் கலந்து கொண்டனர்



ஈரோடு மாநகர் கோட்டை ஆருத்ரா கபாலீஸ்வரர் கோவிலில் தேர்த்திருவிழா வருகிற 19ந்தேதிகிராமசாந்திநிகழ்ச்சியுடன்தொடங்குகிறது.21ந்தேதிகோவிலின்கொடிமரத்தில் தேரோட்டத்துக்கான கொடி ஏற்றப்படுகிறது. 27ந்தேதி தேரோட்டம் நடக்கிறது. அன்று காலையில் ஏராளமான பக்தர்கள் தேரை வடம் பிடித்து முக்கிய வீதிகள் வழியாக இழுத்து செல்கிறார்கள். 30ந்தேதி வைகாசி விசாக தீர்த்தவாரி என கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மதுரை மத்தியதொகுதி எல்லீஸ்நகா் பகுதிகழகத்தின் சாா்பாக பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி த வே க வின்வெற்றிவிழாசிறப்பாககொண்டாப்பட்டது.விழாவில் த வே க வின் பகுதிகழசெயலாளா்ஜான்பீட்டா் தலைமை யிலும் விழாஏற்பாடுB.அலாவூதீன்(எ) சோனிஅவா்களும் மற்றும் நிா்வாகிள் ஜாபா் பிரபு விமல்குமாா் சிராஜ்தீன் அருண் மற்றும் மகளீா் அணியினா்கள்

### தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் மாநில தலைமை அறிவித்துள்ள

# "அண்ணல் நபியே அழகிய முன்மாதிரி" பத்து மாத பிரச்சார செயல் திட்ட விளக்க பொதுக்கூட்டம்



ஏகனின் திருப்பெயரால் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் மாநில தலைமைஅறிவித்துள்ள "அண்ணல் நபியே அழகிய முன்மாதிரி" பத்து மாத பிரச்சார செயல் திட்ட விளக்க பொதுக்கூட்டம் தென்காசி மாவட்ட கடையநல்லூர் தவ்ஹீத் நகர் தவ்ஹீத் திடலில் நடைபெற்றது

மக்கா நகர் மற்றும் தவ்ஹீத் நகர் கிளைகள் நடத்திய இக்கூட்டத்திற்கு நிரஞ்சர் ஒலி தலைமை தாங்கினார்

மாவட்ட தலைவர் அப்துல் ஸலாம் முன்னிலை வகித்து உரையாற்றிய பொதுக்கூட்டத்தில்

மாநில மேலாண்மை குழு உறுப்பினர் சகோதரர் M.I சுலைமான் அவர்களும் TNTJ பேச்சாளர் அப்துர் ரஹ்மான் M.I.Sc அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றினர்*

கீழ்காணும் கோரிக்கைகள் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன

*அடிப்படை வசதிகள் *

1. ஆயிரக்கணக்கான குடியிருப்புகள் உள்ள ரஹ்மானியாபுரம், மக்காநகர் மற்றும் தவ்ஹீத் நகர் பகுதியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,அரசு பொது நூலகம் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையம் ஆகியவற்றை உடனடியாகத் தொடங்க வேண்டும். தெருவிளக்குகள், முறையான கழிவுநீர் ஓடைகள் மற்றும் துப்புரவுப் பணிகள் மேற்க்கொள்ளப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

*மின்மயானச் செயல்பாடுகள்*

1. பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையின் அடிப்படையில் கடந்த அரசின் சார்பில் தெற்கு மலம்பாட்டை சாலையில் நிறுவப்பட்ட மின் மயானம் பயன்பாட்டிற்கு வராமல் போதிய அனைத்து வசதிகள் இருந்தும் தற்போது வரை முடங்கிக் கிடக்கிறது புதிதாக பொறுப்பேற்றுள்ளஅரசு தேவையை கருத்தில் கொண்டு உடனடியாக பயன்பாட்டிற்குத் திறக்க வேண்டும்.பெருகி வரும் மக்கள் தொகையை கருத்தில்கொண்டு வடக்கு மலம்பாட்டை சாலையில் உள்ள சுடுகாட்டிலும் புதிய மின்மயானம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*சாலை மேம்பாடு*

3. தென்காசி மாவட்டத்தின் பிரதான போக்குவரத்துச் சாலையான தென்காசி முதல் சிவகிரி வரையிலான சாலை தற்போது மிகவும் பழுதடைந்து, மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேலும், மாவட்டத்தின் உள் சாலைகள் அனைத்தும் குண்டும் குழியுமாக மாறி வாகனங்களை இயக்கவே அச்சப்படும் சூழல் நிலவுகிறது. இதனால் விபத்துகள் அதிகரிப்பதோடு, பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவே, தமிழக அரசு மற்றும் நெடுஞ்சாலைத்துறை உடனடியாகத் தலையிட்டு, தென்காசி - சிவகிரி சாலை மற்றும் மாவட்டத்தின் அனைத்து உள் சாலைகளையும் போர்க்கால அடிப்படையில் முழுமையாகப் புனரமைப்பு செய்து புதிய சாலைகளை அமைத்திட வேண்டும் என இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

*கூட்டணி ஆட்சி*

1.தமிழகத்தின் மக்கள் எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மை வழங்காத நிலையில் தவெக ஆட்சி அமைக்க விசிக, CPI, CPM, IUML, ஆகிய கட்சிகள் ஆதரவளித்துள்ளன, அமைந்துள்ள கூட்டணி ஆட்சி அனைத்து சமூக மக்களும்பயன்பெறும்வகையில் ஊழலற்ற நல்லாட்சி தர வேண்டும் எனவும் முந்தைய ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டங்களை மக்கள் நலன் கருதி தொடர வேண்டும் என இந்த பொதுக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கின்றோம்

*PM Shree திட்டம்*

1. தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு தமிழகத்தில் அரசு அமைப்பதற்கு முன்னரே PM Shree பள்ளிகளுக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடவேண்டும் என ஒன்றிய அரசு அழுத்தம் தந்துள்ளது மாநில அரசின் 40% நிதியோடு செயல்படும் இந்த திட்டத்தின் மூலம் பாமர மக்களை வஞ்சிக்கும் தேசிய கல்விக் கொள்கையையும் மும்மொழிக்கொள்கையும் கொண்டு வர முயற்சிக்கும் ஒன்றிய அரசை இந்த பொதுக்கூட்டத்தின் வாயிலாக வன்மையாக கண்டிக்கின்றோம்

*சிலிண்டர் விலையேற்றம்*

1.ஒன்றியத்தில்ஆளும் பாஜக அரசு எதிர்பார்த்ததுப் போலவே தேர்தலுக்கு பிறகு வணிக சிலிண்டர் விலையை பன்மடங்கு உயர்த்தியுள்ளது, ஏற்கனவே தள்ளாடிக்கொண்டிருக்கும் எளிய ஹோட்டல்கள் முழுமையாக மூடக்கூடிய சூழலை மோடியின் பாஜக அரசு ஏற்படுத்தியுள்ளது, அடுத்து வீட்டு கேஸ் சிலிண்டர், பெட்ரோல் மற்றும் டீசல் விலையும் உயர்த்தப்படுத்தலாம் எனசெய்திகள் வருகின்றன, அடித்தட்டு மக்களின் சிரமங்களை குறித்து சிந்திக்காத மோடியின் பாஜகஅரசை வன்மையாக கண்டிக்கின்றோம், வணிக காஸ் சிலிண்டர் விலையை குறைப்பதோடு மற்ற விலையேற்றங்களை நிறுத்தி வைக்க வேண்டும் என ஒன்றிய பாஜக அரசை இந்த பொதுக்கூட்டத்தின் கூட்டத்தின் வாயிலாக வலியுறுத்துகின்றோம்

1.தமிழகத்தில் வாழும் இஸ்லாமியர்கள் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும், பொருளாதாரத்திலும் மற்ற சமூகங்களை விட பின் தங்கிய நிலையிலேயே உள்ளனர் , இஸ்லாமியர்களின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று புதிதாக அமைந்துள்ள அரசு இஸ்லாமியர்களின் இடஒதுக்கீட்டை 7 சதவீதமாக அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என இந்தக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கின்றோம்.

நிகழ்வில் மாவட்ட செயலாளர் ஜலாலுதீன் பொருளாளர் அன்வர் சாதிக் துணைத்தலைவர் அப்துல் பாசித் துணைச் செயலாளர்கள் ஹஜாமைதீன், பீர் மைதீன், செய்யதலி, அப்துல் பாசித், முஹமதலி பிலால், மருத்துவ அணி அப்துல்லாஹ் மாணவரணி ரபிக் ராஜா வர்த்தக அணி இனாமுல் ஹக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

கடையநல்லூர் அனைத்து கிளை நிர்வாகிகள் மக்கா நகர் சேகனா,மைதீன் பிச்சை, ஷேக் ,அமானுல்லாஹ் ரஹ்மத்துல்லாஹ் தவ்ஹீத் நகர் பைசல், ரஹ்மானியாபுரம் கிளை பாருக் , பேட்டை கிளை சுலைமான், மதினாநகர் கிளைபாதுஷாEBசதாம் டவுண் கிளை இஸ்மாயில் ஆகியோருடன் நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் கலந்துகொண்டனர் . நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாவட்ட தொண்டரணி செயலர் தாவூதுடன் அனைத்து கிளை தொண்டரணியினர் சிறப்பாக செய்திருந்தனர் இறுதியாக மக்கா நகர் சிராஜுதீன் நன்றியுரையாற்றினார் இப்படிக்கு S.ஜலாலுதீன்மாவட்ட செயலாளர் ஊடக தொடர்பிற்க்கு முஹமதலி பிலால் (துணை செயலாளர்) Mobile 97915 61316



# இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் அமைப்பின் தமிழ்நாடு கிளையின் 257வது மாநில செயற்குழு கூட்டம்

## பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் அமைப்பின் தமிழ்நாடு கிளையின், 257வது மாநில செயற்குழு கூட்டம் கோவை காந்திபுரம் பகுதியில் உள்ள தனியார் உணவக அரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஐஎன்டியூசி மாவட்ட துணை தலைவர் ராஜா பழனிசாமி தலைமை தாங்கினார். ஐஎன்டியூசி, சிடிசி இணை செயலாளர் ராஜேஷ் பிரேம் குமார் முன்னிலை வகித்தார். இந்த மாநில செயற்குழு கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் விஸ்ணுபிரசாத், கலந்து கொண்டு ஐஎன்டியூசி அமைப்பின் பல்வேறு கோரிக்கைகளை அரசுக்கு எடுத்து கூறினார்.தொடர்த்துசெய்தியாளர்களிடம் கூறிய விஸ்ணுபிரசாத் கூறியதாவது..

தமிழ்நாடு ஐஎன்டியூசி சார்பாக, மாநில செயற்குழு கூட்டம் கோவையில் நடைபெற்று வருகின்றது. தமிழகம் புதிய பாதையில் தனது பயணத்தை துவங்கியுள்ளது . இதற்க்குகாரணம்தவெக தலைவர் விஜய் முதல்வராக பதவியேற்கும் நிகழ்ச்சியில் ராகுல் காந்தி கலந்து கொண்டு தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். அரசியல் என்றால் இப்படிதான் என்று கடந்த 60 ஆண்டுகளாக ஒரு திசையை நோக்கி சென்று கொண்டிருந்தது அதை மாற்றி இனி தமிழகம் என்றால் இப்படித்தான் இருக்கும், என்று தெரிவித்துள்ளார். இதில் மக்கள் பணம் தனக்கு ஒரு பைசா கூட வேண்டாம் என்று மக்களிடம் விஜய் தெரிவித்துள்ளார். அந்த நம்பிக்கையை ஏற்று மக்கள் அவருக்கு இந்த பொறுப்பைவழங்கியுள்ளனர். அதனை அவர் சிறப்பாக செய்வார் என நம்புவதாகதெரிவித்தார். இனி தமிழகம் நல்ல பாதையில் பயணிக்கும் என தெரிவி'த்தார். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக,தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணைத் தலைவரும்,வழக்கறிஞருமான புஸ்பானந்தம், ஐஎன்டியூசி மாநில நிர்வாகிகள், பன்னீர் செல்வம், கோவை செல்வம், ராமகண்ணன், நாராயணசாமி, பிரியங்கா காந்தி தொழிற்சங்க செயளாலர் பட்டீஸ்வரன்,மற்றும்நிர்வாகிகள், மாரிமுத்து, சரவணக்குமார், மதியழகன், சமீர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒரத்தி அரசினர் மேல்நிலைப்பள்ளியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி

## ரூ.2லட்சம் மதிப்பீட்டில் பள்ளி கலையரங்க கட்டிடம் திறப்பு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த அச்சிறுப்பாக்கம் அருகே உள்ள ஒரத்தி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சிகள் 2 லட்சம் மதிப்பீட்டில் பள்ளி கலையரங்க கட்டிடம் குடிநீர் குழாய் அமைத்து கொடுத்தனர். அச்சிறுப்பாக்கம் அருகே உள்ள ஒரத்தி அரசினர் மேல்நிலைப்பள்ளியில் 1991 92 ம் ஆண்டு பயின்ற முன்னாள் மாணவர்களின் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 35 வருடங்களுக்குப் பிறகு மாணவர்கள் தங்களின் குடும்பத்தாரோடு ஒருவரை ஒருவர் சந்தித்து மகிழ்ந்தனர். பின்பு தங்கள் பயின்ற அரசு பள்ளிக்கு இரண்டு லட்சம் மதிப்பீட்டில் கலையரங்ககட்டிடம் கட்டி அரசு பள்ளி மாணவர்களின் பயன்பாட்டிற்காக அதனை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர்.

மேலும் பள்ளி வளாகம் முழுவதும் உள்ள குடிநீர் குழாய் அமைத்து கொடுத்தனர். விழாவில் முன்னாள் பள்ளி தலைமை ஆசிரியர்கள் முன்னாள் மாணவ மாணவிகள் பலர் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து கொண்டனர். விழாவில் கலந்து கொண்ட முன்னாள் மாணவர்களுக்கு நினைவு பரிசு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.



தமிழ்நாடு முதலமைச்சராக சி. ஜோசப் விஜய் ,சென்னையில் பதவியேற்று கொண்டார். அவருடன் சேர்த்து 9 பேர் அமைச்சர்களாக பதவி ஏற்று கொண்டனர். இந்த நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் ஆக தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய்பொறுப்பேற்றதைமுன்னிட்டுமதுரைமாவட்டத்தில்உள்ளடிவிகேதொண்டர்கள்உற்சாகமாககொண்டாடினார்கள். குறிப்பாக மதுரை மாவட்டம் வடக்கு மாவட்டம் சார்பாக ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள திருவள்ளுவர் சிலை அருகே கோரிப்பாளையம் பகுதி செயலாளர் ஜெயின்அலாவுதின் தலைமையிலும் புதூர் பகுதியில் பகுதி செயலளார் அசன்முகமது தலைமையிலும் நரிமேடு பகுதியில் பகுதி செயலாளர் சுலைமான்கனிபாஷா தலை மையிலும் 26 / 27 வது வட்ட செயலாளர்கள் செல்வம், விஜய் மற்றும் டி வி கே தொண்டர்கள், மகளிர் அணி நிர்வாகிகள் என 100 க்கும் மேற்படட தொண்டர்கள் உற்சாகமாக பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள்.

### கீழப்பாவூர் ஒன்றியம் கல்லூரணி ஊராட்சி பாவூர்சத்திரத்தில்

# ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார் ஏற்பாட்டில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது



கீழப்பாவூர் ஒன்றியம் கல்லூரணி ஊராட்சி பாவூர்சத்திரத்தில் கல்லூரி ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார் அவர்கள் ஏற்பாட்டில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தொழில் அதிபர் ஆர் கே காளிதாஸ்அவர்கள் தலைமை தாங்கினார்கள்

தொழிலதிபர் சேவியர் ராஜன் பொதுக்குழு உறுப்பினர் ஏபி அருள் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அருணோதயம் குலசேகரபட்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் இளங்கோ மாவட்ட கவுன்சிலர் சாக்ரடீஸ் ஆகியோர் முன்னிலை வைத்தனர்

ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார் அவர்கள் வரவேற்று பேசினார்கள்

பொதுமக்களுக்கு பழம் மற்றும் மோர் வழங்கி முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றினார்கள்

நிகழ்ச்சியில் முன்னாள் அறங்காவலர் கால சாமி முன்னாள் மாவட்ட பொறுப்புகுழு உறுப்பினர் மேகநாதன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வின்சென்ட் ஒன்றிய கவுன்சிலர் சங்கர் அட்மா சேர்மன் குணசீலன் ஆலங்குளம் பேரூராட்சி முன்னாள் துணை சேர்மன் தங்க செல்வம் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் தீபன் சக்கரவர்த்திமாவட்ட பிரதிநிதிகள் சமுத்திர பாண்டியன் வளர்மதி ராஜன், அன்பழகன் துரைப்பாண்டியன் ஸ்டீபன் சத்யராஜ் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் சுப்பிரமணியன் கிளைக் கழக நிர்வாகிகள் வைத்திலிங்கராஜாபொட்டுத்தாய் சிவன் பாண்டியன் ரூபன் கண்ணன் முத்துப்பாண்டி பீமன் சிவசக்தி அருணாசலம் இளைஞரணி துணை அமைப்பாளர் ஹரி கிருஷ்ணன் ஒயிட் ராஜா பெரியார் திலீபன் அருள் ஜூலியஸ் ஒன்றிய பிரிதினிதி சேர்மலிங்கம் அருள்பாண்டியன் வி. எ நகர் கணேசன் சண்முக சுந்தர்ராஜ்,,சேகர்,பொன் செல்வம் ,தாசன், கதிரேசன் தினகரன் ,சுபாஷ், கழக வழக்கறிஞர் ஹரிகிருஷ்ணன் குரும்பை சமுத்திரபாண்டிஆனந்த், ஆல்வின், வினோத் ஆசீர் தமிழ்ச்செல்வன் பால்கனி பரமசிவம் ஆனந்தராஜ் காந்திராமன் தனக்குமார் பாண்டி ஆசாரி துரை பாண்டியன் வினைதீர்த்தான் ராஜேந்திரன் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

முடிவில் ஒயிட் ராஜா அவர்கள் நன்றி கூறினார்கள்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.